## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.64/2020

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 17.02.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஷ் | ஜாதி | : | |
| த/பெயர் | : | கலியபெருமாள் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்தில் தென்னை மரம் உள்ளது. கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்னதாக தென்னை மரம் வைக்கப்பட்டது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு முன்பு தென்னைமரங்கள் தாத்தா நாராயணசாமி அனுபவத்தில் இருந்தது. தாவா சொத்துக்கள் என் தாத்தாவின் குடும்ப சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குபத்திரங்கள் எனது பெயரில் உள்ளது. அதற்கு முன்பாக என் அப்பா பெயரில் பட்டா மட்டும் இருந்து. எனது பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை தவிர வேறு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் தாவா சொத்திற்கு இல்லை. தாவா சொத்திற்கு பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக செட்டில்மெண்ட ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா அம்மா விருப்பத்தின் பேரில் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. தாவா சொத்துக்களை ஏற்கனவே மாயகிருஷ்ணன் என்பவர் அனுபவித்து வந்தார் என்றால் தரிசாக இருந்ததால் சிறிதுகாலம் அனுபவித்து வந்தார்.மாயகிருஷ்ணன் என்பவர் தாவா சொத்தில் தென்னை மரங்கள் வைத்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு பக்கத்தில் தான் என் சித்தப்பாவான வா.சா.2 ற்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். அவர் அந்த சொத்தை பிரதிவாதியின் மகன் பெயரில் கிரையம்

செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மாயகிருஷ்ணன் என்பவரிடமிருந்து தாவா சொத்தை ஒப்படைக்க கோரி எழுத்து மூலமாக ஆவணம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.மாயகிருஷ்ணன் என்பவர் பிரதிவாதியின் மாமனார் ஆவார். மாயகிருஷ்ணன் என்பவரை நான் நேரில் பார்த்துள்ளேன். அவர் இறந்து தோராயமாக சுமார் 7-8 வருடங்கள் இருக்கலாம். சரியாக தெரியவில்லை. தாவா சொத்து தொடர்பாக ஊரில் சமாதானம் பேசினோமா என்றால் அவர்கள் பஞ்சாயத்தில் முன்னிலையில் பேசினார்கள். அந்த பஞ்சாயத்திற்கு என் அம்மா சென்றிருந்தார். நான் பஞ்சாயத்தில் சொன்னதை ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.02.18 18:20:53 +0530

District Munsif

Mannargudi.